# தமிழ் வளர்ச்சிக் கழகம்

## செய்தி மின்மடல்

தனிச் சுற்றுக்கு மட்டும்

2: 1 ஏப்ரல் 2026


### உங்களுடன் ...

தமிழ்நாடு அரசின் நிதி உதவியுடன்,
நாடகவியல் களஞ்சியத்திற்கு
அடுத்தாகத் தமிழியல் கலைக்களஞ்சியம்
இரண்டு தொகுதிகளாக
ஒவ்வொன்றும் 1000 பக்கங்களுக்கு மேல்,
மதுரையில்
கலைஞர் நூற்றாண்டு நூலகத்தின்
கருத்தரங்கக் கூடத்தில்
25.04.2026 மாலை வெளியிடப்பட்டன.

தேர்தலும் சூரியனும்
போட்டி போட்டுக்கொண்டு
தகித்துக் கொண்டிருக்கும் வேளையில்,
இளைப்பாறும் வகையில்
தமிழ் வளர்ச்சிக் கழகத்
தமிழியல் கலைக்களஞ்சியத்
தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன.

தலைமை ஏற்றவர்,
தமிழ் வளர்ச்சிக் கழக
அறங்காவலர் குழுவின் தலைவர், மேனாள்
ஒன்றிய நிதியமைச்சர்.

தேங்கியும் ஏங்கியும் கிடந்த
தமிழ் வளர்ச்சிக் கழகப் பணிகளுக்குக் கை
கொடுத்து, நம்பிக்கை தந்து,
செயற்பட வழிகாட்டிக் கொண்டிருப்பவர்
தலைமையில் விழா நடைபெற்றது.

பொதுக் கலைக்களஞ்சியம்
10ஆவது தொகுதி வெளிவந்தது
1968ஆம் ஆண்டு.

தமிழியல் தொடர்பாக
அதுவரை பதிவான கட்டுரைகளின்
தொகுப்பாக வந்திருக்கும்
தமிழியல் கலைக்களஞ்சியத் தொகுதிகளின்
சிறப்புகளை எடுத்துரைத்தார்.

இந்தத் தொகுதிகளை
இன்றைய வரைக்குமான
பதிவுகளின் தொகுப்பாக்கும்
திட்டத்திற்கும் அறிவிப்பினை வழங்கிச்
செய்ய வேண்டிய தமிழ்ப் பணிகளின்
வாயில்களைச் சுட்டிக்காட்டினார்.

நூல்களை வெளியிட்டவர்,
தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர்
பேராசிரியர் முனைவர் ம. திருமலை அவர்கள்.
தமிழியல் கலைக்களஞ்சியத் தொகுதிகளின்
வடிவமைப்பையும் அச்சு நேர்த்தியையும் பாராட்டினார்.

மேலும்
இப்படியான நூல்களைத் தயாரிக்க
எடுத்துக்கொள்ளும்
உழைப்பைப் பற்றியும்,
நூலில் உள்ள அரிய செய்திகளைப் பற்றியும்
சுவைபட எடுத்துரைத்தார்.

நூல்களைப் பெற்றுக்கொண்டு
சிறப்புரையாற்றினார்
மக்களவை உறுப்பினர்
திரு சு. வெங்கடேசன் அவர்கள்.

அபிதான கோசம்,
அபிதான சிந்தாமணி முதலாகத்
தமிழில் மேற்கொள்ளப்பட்டிருக்கும்
அகராதி, கலைக்களஞ்சியப் பணிகளின்
வரலாற்றுப் பின்னணியில்,
தமிழியல் கலைக்களஞ்சியத் தொகுதிகளின்
சிறப்பினை எடுத்துரைத்தார்.

"பதிலுக்கு மூத்தது கேள்வி;
கேள்விக்கு ஊற்றுக்கண் பதில்.
கேள்வி கேட்கத் தேடல்;
அதற்கு முன்பு ஒரு செய்தி வேண்டும்-
அதுவும் பதில்தானே!
பொதுக் கலைக்களஞ்சியம்- மூத்த பதில்;
தேடலுக்கான பதில்;
தேடிக் கண்டடையும் பதில்.
தமிழியல் தொடர்பான
தொடரும் கேள்விகளுக்கான பதில்-
இனி வரும் கேள்விகளுக்கான ஊற்றுக்கண்கள்
தமிழியல் கலைக்களஞ்சியங்கள்!"

தலைமுறைகளைத் தயார்ப்படுத்தும் பணியில்
தமிழியல் கலைக்களஞ்சியங்கள்
உங்கள் கைகளில் / கண்களில்...

தொடர்வோம்.. நன்றி.

# தமிழியல் கலைக்களஞ்சிய வெளியீட்டுவிழா - ஊடகங்களில்...

தினமணி
ஞாயிற்றுக்கிழமை 26 ஏப்ரல் 2026

## குழந்தைகளை தமிழ் அன்பர்களாக உருவாக்க வேண்டும்

முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம்



நிதி தேவை

epaper.dinamani.com

தினமலர் (மதுரை) 2026 04 26
பக்.6

## தமிழ் அன்பர்களாக குழந்தைகளை மாற்றுங்கள்

### முன்னாள் அமைச்சர் சிதம்பரம் பேச்சு

மதுரை, ஏப்.26–

''தமிழ் அன்பர்களாக குழந்தைகளை மாற்றுங்கள். அவர்கள் தமிழறிஞர்களாக வருவர்,'' என மதுரையில் தமிழ் வளர்ச்சி கழகம் சார்பில் நடந்த தமிழியல் கலைக் களஞ்சியம் வெளியீட்டு விழாவில் அதன் அறங்காவலர் குழு தலைவர் முன்னாள் மத்திய அமைச்சர் சிதம்பரம் பேசினார்.

விழாவில் தமிழ் வளர்ச்சிக் கழக தலைவர் ராஜேந்திரன் வரவேற்றார். புத்தகத்தை தமிழ்ப் பல்கலை முன்னாள் துணைவேந்தர் திருமலை வெளியிட, மதுரை எம்.பி., வெங்கடேசன் பெற்றுக்கொண்டார்.

சிதம்பரம் பேசியதாவது:

நான் தமிழ் அன்பன் தான். தமிழ் வளர்ச்சிக் கழகம் 1947ல் அவினாசிலிங்கம் செட்டியார் முயற்சியில் துவங்கப்பட்டது. பொருள் ஆதாரம் இல்லாமல் எந்த செயலையும் செய்ய முடியாது.

தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு தமிழக அரசு ரூ.2 கோடி வைப்பு நிதி, செலவிற்கு ரூ.15 லட்சம் தந்தது. நாங்கள் ரூ.70 லட்சம் திரட்டியிருக்கிறோம். தமிழியல் கலைக்களஞ்சியம் ஒரு தொகுப்புத்தான். அதில் எல்லா பொருளும் இருக்கும். இது பெரிய பொக்கிஷம்.

புது கலைக்களஞ்சியம் அல்லது திருந்திய கலைக் களஞ்சியத்தை தயாரிப்பதற்கு எங்களுக்கு சக்தி இல்லை. பெரும் தொகை தேவைப்படும். அரசே கலைக்களஞ்சிய வரி போட்டு அனைவரிடமும் தலா ரூ.1 வசூலிக்கலாம். அரசு, புரவலர்கள் உதவும் மனநிலையில் உள்ளனர்.

வீடுகளில் தமிழ் ஆர்வத்தை உருவாக்குங்கள். தமிழ் அன்பர்களாக குழந்தைகளை மாற்றுங்கள். அவர்களில் பலர் தமிழறிஞர்களாக வருவர். இவ்வாறு பேசினார். பொருளாளர் சரவணன் நன்றி கூறினார்.

தீக்கதிர்

## "தமிழியல் கலைக்களஞ்சியம்" நூல் வெளியீட்டு விழா

### ப.சிதம்பரம் எம்.பி. – சு.வெங்கடேசன் எம்.பி. பங்கேற்பு



### 'வாக்கு சதவிகித உயர்வுக்கு எஸ்ஐஆர்-தான் காரணம்!'

https://www.thehindu.com/news/cities/Madurai/p-chidambaram-releases-tamizhiyalkalaikalanjiyam-book-in-madurai/article70905920.ece

https://timesofindia.indiatimes.com/city/madurai/tamil-valarchi-kazhagam-to-be-fully-reactivated-chidambaram/articleshow/130521319.cms

## திட்டம் – ஆய்வு



தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் 08.04.2026 அன்று மாலை 04.00 மணியளவில் மாணவர் தமிழ் அகராதியின் ஆய்வுக் கூட்டம் தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களின் தலைமையில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் புதுபிக்கப்பட்ட அறையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேராசிரியர்கள் முனைவர் கி. அரங்கன், முனைவர் தெய்வசுந்தரம், முனைவர் ஒப்பிலா மதிவாணன், முனைவர் அ.ஜேம்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.
தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் அவர்கள் அறிஞர் பெருமக்களை வரவேற்று மாணவர் அகராதி திட்டம்பற்றி அறிமுக உரையினை அளித்தார். அதனைத் தொடர்ந்து முனைவர் அ. ஜேம்ஸ் அவர்கள் மாணவர் அகராதி எவ்வாறு தொகுக்கப்பட்டிருக்கிறது என்றும் முதற்கட்டமாக ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையில் உள்ள தமிழ்வழிப் பாட நூல்களிலிருந்து அகராதிப் பதிவுகள் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளன என்பதைப் பற்றியும், மேலும் அ முதல் ஔ வரையுள்ள உயிரெழுத்துகள் மற்றும் ஆய்த எழுத்து ஃ வரை தமிழ் - தமிழ் - ஆங்கிலம் மாணவர் அகராதி தொகுக்கபட்டுள்ளதைப் பற்றியும் விரிவாக விளக்கினார்.
பின்னர் அகராதிப் பதிவுகளை ஆராய்ந்த அறிஞர் பெருமக்கள் பின்வருமாறு கருத்துகளைத் தெரிவித்தனர்.

### முனைவர் தெய்வசுந்தரம்:

1. அகராதிப் பதிவில் எடுத்துக்காட்டுகளுடன் நின்றுவிடாமல் சற்றுக் கூடுதலாகத் தலைசொல்லுக்கான பயன்பாட்டை (usage) எளிதான தமிழில் அளிக்கலாம் எனப் பரிந்துரைத்தார். மேலும் எடுத்துக்காட்டுகள் முழுமையானதாக இருக்கவேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.
2. ஒற்றுப் பிழைகள், எழுத்துப் பிழைகள் மற்றும் தொடரியல் பிழைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்றார்.
3. எழுத்துகள் பயன்படுத்துவதில் ஒரு சீர்மை இருத்தல் அவசியம் என கூறினார்.
4. அஃறிணை, அருங்காட்சியகம் போன்ற பதிவுகளின் பொருளினைத் திருத்தியெழுதலாம் எனக் குறிப்பிட்டார்.
5. அடர்ந்தகாடு என்ற பதிவிற்கான எடுத்துக்காட்டினை மாற்றி அளிக்கலாம் எனக் கூறினார்.

### முனைவர் ஒப்பிலா மதிவாணன்:

தமிழ்ப் பொருள்களைத் தரும்போது எவ்வெப்போது இடர்ப்பாடுகள் வருகின்றனவோ அப்போதெல்லாம் பாவாணரின் தமிழ்ச் சொற்களஞ்சியத்தைப் பயன்படுத்தலாம் எனக் குறிப்பிட்டார்.
முனைவர் மாதையன் மற்றும் முனைவர் ஜெயராமன் வரயியலாதச் சூழலில் அவர்கள் இருவரும் தங்களின் கருத்துகளைக் குறிப்புகள் மூலம் தெரிவித்துள்ளனர். அவர்களின் குறிப்புகளும் விவாதிக்கப்பட்டன. குறிப்பாக 'உழவுத்தொழில்' என்ற பதிவிற்கு நிறைவான பொருளை அளிக்கவேண்டும் என்றும் விவாதித்தனர்.
இறுதியாகத் தலைவர் அவர்கள் அறிஞர்கள் கூறிய அனைத்துக் கருத்துகளையும் உள்வாங்கிக் கொள்வதோடு மட்டுமில்லாமல் கூட்டத்திற்கு வர இயலாதவர்கள் அளித்த கருத்துகளையும் சேர்த்து அதற்கேற்றாற்போல் மாணவர் அகராதியினை மாற்றியமைக்கும்படி தெரிவித்தார்.
அவ்வாறு மாற்றியமைக்கப்படும் மாணவர் அகராதி மறு ஆய்வு மே மாதத்தில் மேற்கொள்ளப்படலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

29.04.2026 அன்று தமிழ் வளர்ச்சிக் கழக ஆட்சிக் குழுத் தலைவர் பொருளாளர் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்ட நிருவாகக் கூட்டம் நடைபெற்றது. 2025-26 ஆம் ஆண்டின் பணிகள் குறித்த ஆய்வு மற்றும் நிதி நிலை தொடர்பாகவும் குறித்தும் அறிவுறுத்தப்பட்டது.

## தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆட்சிக் குழுக் கூட்டம்

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆட்சிக் குழுக் கூட்டம் தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களின் தலைமையில் 20.04.2026 முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முனைவர் கிருஷ்ணசந்த் சோர்டியா, முனைவர் சா. சரவணன், முனைவர் உலகநாயகி பழனி, முனைவர் பெ.காளிராஜ், சிவாலயம் திரு ஜெ.மோகன், முனைவர் மணிமேகலை கண்ணன், முனைவர் வாசுகி கண்ணப்பன், முனைவர் ஒப்பிலா மதிவாணன் ஆகியோர் கலந்து கொண்டனர். முனைவர் வாசுகி கண்ணப்பன் அவர்களுக்கு 80 ஆவது பிறந்த நாள் வாழ்த்துகள் தெரிவிக்கபட்டன.



## சொல் புதிது

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சொல் புதிது திட்டத்தின் பன்னிரெண்டாவதுக் கூட்டம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் 15.04.2026 புதன்கிழமை காலை 11.30 மணி முதல் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இறுதி செய்யப்பெற்ற சொற்கள் பின்வருமாறு:

| வ. எ ண் | ஆங்கிலம் | இறுதி செய்யப்பட்டவை |
|---|---|---|
| 1 | Air stair | விமான ஏணிப்படி |
| 2 | Adhoc payment | இடைக்காலப் பயன்தொகை |
| 3 | Avalanche | பனிச்சரிவு |
| 4 | Back fire | எதிர்விளைவு |
| 5 | Chronic Neurological conditions/ disorder | முற்றிய நரம்பியல் நோய் |
| 6 | Deafblindness | கட்செவிக் குறைபாடு |
| 7 | Elephant corridor | யானை வழித்தடம் |
| 8 | False ceiling | பொய் அணி கூரை |
| 9 | Fish ladder | மீன் ஏறுபாதை |
| 10 | Flays | கடுஞ்சாடல் |
| 11 | Fly ash brick | சாம்பல் செங்கல் |
| 12 | Gerrymander | தொகுதி வரையறை அரசியல் (தொகுதி வரையறை உள் அரசியல்) |
| 13 | Jet bridge | விமான வழிப்பாலம் |
| 14 | Juxtapose | எதிர் இணை |
| 15 | Modular kitchen | அணிநிலை அடுக்களை |
| 16 | Parasailing | வான்குடை நீச்சல் |
| 17 | Pros and cons | நிறை குறை |
| 18 | Puppet master | ஆட்டுவிப்பவர் |
| 19 | Quiz master | வினாடி வினா நடத்துனர் |
| 20 | Rebar | கட்டுமான வலுக்கம்பி |
| 21 | Rhetoric | சொல்லலங்காரம் |
| 22 | Sober dialogue | சமநிலைக் கருத்தாடல் |
| 23 | Sock Slider | காலுறைக் கருவி |
| 24 | Speed bump | வேகத்தடை மடிப்பு |
| 25 | Springboard | உந்து பலகை |
| 26 | Stereotype | சலிப்புதரு வார்ப்பு |
| 27 | Unicornal | அருந்திறன் |
| 28 | Unit Linked Insu | முதலீடுசார் காப்பீடு |